ஆதித்தமிழர்களின் தன்னுரிமைக்கான

மண்ணுரிமை மாநாடு

நெல்லை

20.08.2012

## தீர்மானங்கள்

எண் 1

ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களான அருந்ததியர்கள் உள்ளிட்ட பட்டியல் சாதியினரின் முற்றுமுழுதான விடுதலைக்கு, நில உரிமை அடிப்படையான ஒன்றாக அமைகிறது. ஆனால், காலம் காலமாக உழைத்து, மண்ணையும் நாட்டையும் வளப்படுத்துகிற, உழைப்பை வயல்வெளியில் கொட்டி நெல்மணிகளாகவும் உணவுப்பொருட்களாகவும் விளைய வைத்துக் கொடுக்கிற, கொளுத்தும் வெயிலில், கொட்டும் மழையில், தார்ச்சாலைகள் அமைத்து, சொகுசான போக்குவரத்துக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கிற, வானை முட்டி நிற்கிற கட்டிடங்களை அமைத்துக் கொடுக்கிற, பிறந்தது முதல் இறக்கிற வரை மண்ணோடு இருக்கிற உணர்வுப் பூர்வமான உறவை ஒரு நொடி கூட விட்டுக்கொடுக்காமல் வாழ்ந்து வருகிற ஆதித்தமிழர்களுக்கு குடியிருக்க 5 செண்ட் மனையிடமும் வேளாண்மை செய்ய 5 ஏக்கர் விளைநிலமும் வழங்க வேண்டுமென தமிழக அரசை இம்மண்ணுரிமை மாநாடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது

எண் 2

இந்தியத்துணைக்கண்டம் முழுவதுமே ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான வன் தாக்குதல்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றனவே தவிர குறைந்தபாடில்லை. தீண்டாமைக் கொடுமைகளுக்கும் இழிவுகளுக்கும் ஆளாக மறுக்கிற ஒடுக்கப்பட்ட மக்கள் மீது கொலை, அரிவாள்வெட்டு, அமிலம் வீச்சு, தீவைப்பு, பாலியல் வன்முறை, மலம் திணிப்பு, ஊர்விலக்கம் உள்ளிட்ட பலவகையிலான வன்கொடுமைகள் திணிக்கப்பட்டு வருகின்றன. உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டிய வன்கொடுமைத் தடுப்புச் சட்டமோ ஆதிக்க சாதியினரின் கைப்பிள்ளையாக கைகட்டி வேடிக்கை பார்க்கிறது. எனவே, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டம் 1989 மற்றும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர்

(வன்கொடுமைகள் தடுப்பு) விதிகள் 1995 ஐ எழுத்தில் உள்ளவாறு முழுமையாகவும் கடுமையாகவும் நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும், குறிப்பாக இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளவாறு தலித்துகள் மீதான வன்கொடுமை வழக்குகளை விசாரிக்க மாவட்டம் தோறும் அமைக்கப்பட்டுள்ள மகளிர் நீதிமன்றங்கள் போல அமர்வு நீதிமன்றம் அளவிலான மாவட்ட சிறப்பு வன்கொடுமை நீதிமன்றம் அமைக்க வேண்டுமெனவும் இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

எண் 3

நாகரீகமான சமூகம் பண்பாடான சமூகம் என்று சொல்லிக் கொள்வதற்கு வெட்கப்படுகிற அளவில், இளம்பெண்கள் இளம் ஆண்களை காதலித்து திருமணம் செய்ய உலக அளவில் எந்த நாட்டிலும் தடை இல்லாதபோது, இந்தியத் துணைக்கண்டத்தில் மட்டும் சாதியின் பெயரால், தடைவிதிக்கப்படுவது நாகரீக எண்ணம் கொண்டோரின் உள்ளங்களில் சொல்லணா அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. சாதி மறுத்து மணம் புரிவோரையும், சாதிமறுப்புத் திருமணங்களுக்கு உதவி புரிவோரையும், கை காலை வெட்டுவேன், கொலை செய்வேன் என்று பகிரங்கமாக பொது மேடைகளில் திட்டுவதும், காதல் என்கிற இயல்பான உணர்வை சாதி பார்த்துத்தான் வரவேண்டும் என்று பிற்போக்குத்தனமாக, இயற்கைக்கு மாறாக சிந்தித்து காதலுக்கு எதிராக கல்லூரிகளில் சென்று எதிர்ப்பிரச்சாரம் செய்வதும் எல்லை மீறிப்போய் அவ்வாறு காதல் செய்து திருமணம் கொண்டோரை தங்கள் வீட்டுப்பெண்கள் என்று கூடப் பார்க்காமல் கொடூரமாக கொலை செய்வது அதீத மனநோயையே சுட்டிக்காட்டுகிறது. இந்தப்போக்கை வளரவிடாமல், சாதி மறுத்துக் காதல் திருமணம் செய்து கொண்டோரைக் கொலை செய்வோரை கடுமையான சட்டப்பிரிவுகளின் கீழ் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், சாதி மறுப்புக் காதல் திருமணங்களை ஊக்குவிக்கும் வகையிலான பிரச்சாரத்தை அரசே மேற்கொள்ள வேண்டுமெனவும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

எண் 4

முடை நாற்றமெடுத்துப்போன இந்திய சாதியச் சமுதாயம் தொடர்ந்து தனது இருப்பைத் தக்க வைத்துக்கொள்ள பேருதவியாக இருப்பது ஒவ்வொரு கிராமமும் ஊர் வேறு சேரி வேறாக பிரிந்து கிடப்பதுதான். கிராம நடைமுறையான இந்தப் பழக்கம் இப்போது

நகரங்களிலும் வேரூன்றியுள்ளது. இவ்வாறான பாகுபாட்டை ஒழிக்க வேண்டிய அரசாங்கமோ வேடிக்கை பார்ப்பது மட்டுமின்றி, பாகுபாட்டை மேலும் வளர்த்து வருகிறது. புதியதாக உருவாகும் ரியல் எஸ்டேட் வளாகங்கள்தான் அடுத்த தலைமுறையின் வசிப்பிடங்கள் என்ற நிலையில், அங்கே ஒடுக்கப்பட்ட மக்கள் துப்புரவாக உள்ளே நுழைய அனுமதி இல்லாத நிலை உள்ளது. இதை மாற்றும் வகையில் புதியதாக உருவாக்கப்படும் ரியல் எஸ்டேட்டுகளில் 30% மனைகள் தலித்துகளுக்கு ஒதுக்கப்பட்டால் தான் உள்ளாட்சி மன்றங்களின் மனை அங்கீகாரம் வழங்கப்படும் என்கிற வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென இம்மண்ணுரிமை மாநாடு கேட்டுக்கொள்கிறது.

எண் 5

வளர்ந்து வரும் நாகரீகத்தின் அடையாளங்கள் என்று சொல்லிக்கொள்கிற மா..நகரங்கள் கூட சாதி என்று வரும்போதும் தீண்டாமை என்று வரும்போதும் துளியும் வெட்கமில்லாமல் தன் கோர முகத்தையே காட்டி நிற்கிறது. நகரங்களில் படித்தவர்களாக இருப்பினும், ஓரளவு வசதி வாய்ப்புகளோடு இருப்பவர்களானாலும், ஐ.ஏ.எஸ் அதிகாரிகளாக இருந்தாலும் தலித்துகளாக இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு வீடு வாடகைக்கு தர அப்பட்டமாகவே மறுக்கின்றனர். வீடுகளைப் போலவே திருமண மண்டபங்களும் தலித்துகளுக்கு தனது நெடிய கதவுகளை அடைத்துக்கொண்டு தீண்டாமையைக் கடைபிடிக்கின்றன. நேரடியாகவும் பல சமயங்களில் நுட்பமான முறைகளைக் கையாண்டு தீண்டாமையைக் கடைப்பிடிக்கிற திருமண மண்டபங்கள் மற்றும் வீட்டு உரிமையாளர்கள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க காவல்துறைக்கு உத்தரவிட வேண்டுமென தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

எண் 6

சாதியும் தீண்டாமையும் இந்த நூற்றாண்டின் ஆகப்பெரிய சவாலாக வளர்ந்து பிரம்மாண்டமாக நிற்கும் நிலையில் சாதி ஒழிப்பையும் தீண்டாமை ஒழிப்பையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல ஏதுவாக, சாதி ஒழிப்பை அறிவியல் கண்ணோட்டத்தோடு வலியுறுத்துகிற புரட்சியாளர் அம்பேத்கரின் “சாதி ஒழிப்பு” எனும் நூலையும், ”இந்தியாவில் சாதிகள்” தோற்றம், அமைப்பியக்கம், அதன் வளர்ச்சி எனும் ஆய்வு நூலையும் புரட்சியாளர் அம்பேத்கர் மற்றும் பெரியாரின் சாதி ஒழிப்புப்

போராட்ட வரலாற்றையும் பள்ளிப் பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டுமெனவும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

எண் 7

இந்தியத் துணைக்கண்டத்தின் விடுதலைப் போராட்ட வீரர்களில் முன்மையானவரும், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளியுமான மாமன்னர் ஒண்டிவீரனாருக்கு எழுப்பப்பட்டு வரும் மணிமண்டபப் பணிகளை முடுக்கி விட வேண்டுமெனவும், மாமன்னர் ஒண்டிவீரனார் நினைவுநாளை ஆண்டுதோறும் அரசுவிழாவாக அறிவித்து அரசே முன்நின்று நடத்த வேண்டுமெனவும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

எண் 8

மனித குல வளர்ச்சி என்பது அறிவியல் வளர்ச்சியோடுதான் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுக்கொள்ள விதியாகும். ஆனால் அதே நேரத்தில், மனிதகுலத்தை நாசப்படுத்தும் அறிவியல் வளர்ச்சியை ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும். அவ்வாறான வகையில்தான் கூடங்குளத்தில் எதிர்காலத் தலைமுறையின் ஆரோக்கிய வாழ்வை நாசப்படுத்தும் வகையில், அணு உலை மின்சாரம் தயாரிப்பதில் கரைகண்ட ஜப்பான் நாடெங்கும் உள்ள அனைத்து அணு உலைகளையும் இழுத்து மூடிவிட ஆயத்தமாகிக் கொண்டிருக்கிற சூழலில் அணு உலைகளைத் திறப்பது என்று மூடத்தனமான உறுதியோடு இருப்பதும், முதல் இரண்டு அணு உலைகளோடு நிறுத்திக்கொள்ளாமல், மேலும் 4 அணு உலைகளை திறக்க முடிவெடுத்திருப்பதும், அணு உலைகளுக்கான எரிபொருள் நிரப்ப முடிவெடுத்திருப்பதும், மக்கள் விரோத நடவடிக்கை என்பதால், அந்த நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்திடவேண்டும் எனத் தமிழக அரசை கேட்டுக்கொள்வதுடன், அணு உலை எதிர்ப்புப் பிரச்சாரத்தை தமிழகம் முழுக்க நடத்த பேரவையின் அனைத்து சனநாயக ஆற்றல்களையும் முடுக்கி விடுவதெனவும் இம்மண்ணுரிமை மாநாடு முடிவெடுக்கிறது.

எண் 9

உலகெங்குமுள்ள அனைத்து தரப்பு மக்களின் அடிப்படை வாழ்வாதார உரிமையான நீர் உரிமை எந்த தரப்பு மக்களுக்கும் மறுக்கப்படக் கூடாது என்பது சர்வதேச அளவில் அனைத்து உலகநாடுகளாலும் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். ஆனால்,

[redacted] தமிழகத்துக்கான ஆற்றுநீர் உரிமை எல்லோராலும் மறுக்கப்பட்டே வருகின்றன. எனவே, தமிழகத்துக்கான நீர் உரிமையை உத்தரவாதப்படுத்தப் படுத்திட மத்திய மாநில அரசுகளை இம்மண்ணுரிமை மாநாடு கேட்டுக்கொள்கிறது.

எண் 10

நவீன உலகின் நாகரீக வளர்ச்சிக்கேற்ப அனைத்துமே மாறிக்கொண்டிருக்கிற சூழலில், சாதியும் தீண்டாமையும் நவீனமாகிக் கொண்டிருக்கின்றன என்பதற்கு, வலைத்தளங்கள் உதாரணமாக இருக்கின்றன. குறிப்பாக, திருமண இணையர்களைத் தேடித்தருகின்ற மணமாலை விளம்பரங்களில் இணையரைத் தேடுவதற்கான குறிப்புகளில் சொந்த சாதியினர் மட்டும் என்றும், சாதி தடையில்லை என்றும் குறிப்பிடப்படுவதோடு எஸ்.சி எஸ்.டியினர் விண்ணப்பிக்க வேண்டாம் என்றும் குறிப்பிடுகின்றனர். நாளிதழ்களிலும் இணையதளங்களிலும் கடைப்பிடிக்கப்படும் இந்த நவீனத் தீண்டாமையை அரசு கண்டுகொள்ளாமல் இருப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன் இப்படியான விளம்பரங்களை உடனடியாக காலம் தாழ்த்தாமல் தடை செய்ய வேண்டுமென இம்மாநாடு வலியுறுத்துகிறது.

எண் 11

இந்தியத் துணைக்கண்ட அளவில், எந்தத் தலைவருக்கும் இல்லாத சிறப்பு புரட்சியாளர் அம்பேத்கருக்கு மட்டுமே உண்டு. அவர்தான் மக்கள் களப்போராளியாகவும், சட்டமேதையாகவும் ஒரே நேரத்தில் விளங்கியவர். இந்திய அரசியல் சாசன வரைவுக்குழுத் தலைவராக இருந்து, பெண்களுக்கான சொத்துரிமை, தொழிலாளர்களுக்கான 8 மணி நேர வேலை, பாரபட்சமில்லாமல் வயது வந்தோருக்கான வாக்குரிமை என பரந்துபட்ட மக்களின் உரிமைக்காகப் போராடியவர். ஆனால், அவரை அரசியல் சாசன சிற்பியாகக் கூட மதிக்காமல், தலித்துகளின் தலைவராக மட்டுமே பார்க்கப்பட்டு, ஒட்டுமொத்த தலித் மக்களின் மீதான வெறுப்புணர்வின் அடையாளமாக, தலித் மக்கள்[redacted] சிறு சிறு உரிமைகளுடனாவது வாழக் காரணமாக இருந்தவர் என்ற அடிப்படையில், மதுரை மாவட்டம் சின்ன உடைப்பில் புரட்சியாளர் அம்பேத்கர் சிலையையும், சமத்துவப்போராளியாக புரட்சியாளர் அம்பேத்கர் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் முன்னணிப் படைவீரராக களம் கண்டு மறைந்த தியாகி இம்மானுவேல் சேகரன் சிலையையும்

சேதப்படுத்திய ஆதிக்க சாதிவெறியர்களை மிக வன்மையாக இம்மாநாடு கண்டிப்பதுடன், அக்கயவர்களை விரைந்து கைது செய்ய வேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. அதுபோலவே, புரட்சியாளர் அம்பேத்கர் பரந்துபட்ட அனைத்து மக்களுக்குமான சனநாயகப் போராளி என்பதை வெகுமக்களிடம் பிரச்சாரம் செய்ய வேண்டுமென சமூகநீதி, முற்போக்கு, சனநாயக அமைப்புகளிடம் இம்மாநாடு தோழமையுடன் கேட்டுக்கொள்கிறது.

எண் 12

பட்டியல் சாதியினர் இந்துத்துவ நெருக்கடியால், சற்றே ஆசுவாசப்படுத்திக்கொள்ள விடுதலை உணர்வு வேண்டியே மதம் மாறுகின்றனர். ஆனால், அவ்வாறு மதம் மாறினால் கூட தீண்டாமையும் சாதிப்பாகுபாடும் பின் தொடரவே செய்கின்றன. எனவே, மதம் மாறிய தலித்துகளுக்கு குறிப்பாக தலித் கிறிஸ்தவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பில் அரசியல் சாசன உரிமையுடன் கூடிய இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென இம்மண்ணுரிமை மாநாடு வேண்டுவதுடன், தற்போது நடைமுறையில் உள்ள கல்வி மற்றும் அரசு வேலைவாய்ப்பில் உள்ள இட ஒதுக்கீட்டுடன் தனியார் துறை வேலைவாய்ப்புகளிலும் இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

எண் 13

உலகமெங்கும் உள்ள சின்னஞ்சிறு நாடுகள் கூட தேசிய இன நிர்ணய உரிமையுடன் இறையாண்மை மிக்க நாடுகளாக உருவெடுத்து வரும் நிலையில், நமக்கு மிகப் பக்கத்தில் உள்ள ஈழம் இன்றளவும் அடிமையாக இருப்பதை இம்மாநாடு மிகக் கவலையுடன் பார்ப்பதோடு, முள்வேலிக்குள் அடைபட்டுள்ள தமிழீழ மக்களின் ஒட்டுமொத்த வேதனைக்கும் ஒரே தீர்வாக சுதந்திரத் தமிழீழமே என்பதால், தமிழீழம் அமைய இந்திய அரசாங்கம் துணை நிற்க வேண்டுமெனவும், தமிழீழ அரசை உலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டுமெனவும், இப்போதைக்கு உடனடியாக தமிழீழ மக்களின் விருப்பத்தை அறிந்து நிறைவேற்ற ஐ.நா அவை பொது வாக்கெடுப்பு ஒன்றினை இயன்றளவு விரைந்து நடத்த வேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

சேதப்படுத்திய ஆதிக்க சாதிவெறியர்களை மிக வன்மையாக இம்மாநாடு கண்டிப்பதுடன், அக்கயவர்களை விரைந்து கைது செய்ய வேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. அதுபோலவே, புரட்சியாளர் அம்பேத்கர் பரந்துபட்ட அனைத்து மக்களுக்குமான சனநாயகப் போராளி என்பதை வெகுமக்களிடம் பிரச்சாரம் செய்ய வேண்டுமென சமூகநீதி, முற்போக்கு, சனநாயக அமைப்புகளிடம் இம்மாநாடு தோழமையுடன் கேட்டுக்கொள்கிறது.

எண் 12

பட்டியல் சாதியினர் இந்துத்துவ நெருக்கடியால், சற்றே ஆசுவாசப்படுத்திக்கொள்ள விடுதலை உணர்வு வேண்டியே மதம் மாறுகின்றனர். ஆனால், அவ்வாறு மதம் மாறினால் கூட தீண்டாமையும் சாதிப்பாகுபாடும் பின் தொடரவே செய்கின்றன. எனவே, மதம் மாறிய தலித்துகளுக்கு குறிப்பாக தலித் கிறிஸ்தவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பில் அரசியல் சாசன உரிமையுடன் கூடிய இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென இம்மண்ணுரிமை மாநாடு வேண்டுவதுடன், தற்போது நடைமுறையில் உள்ள கல்வி மற்றும் அரசு வேலைவாய்ப்பில் உள்ள இட ஒதுக்கீட்டுடன் தனியார் துறை வேலைவாய்ப்புகளிலும் இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

எண் 13

உலகமெங்கும் உள்ள சின்னஞ்சிறு நாடுகள் கூட தேசிய இன நிர்ணய உரிமையுடன் இறையாண்மை மிக்க நாடுகளாக உருவெடுத்து வரும் நிலையில், நமக்கு மிகப் பக்கத்தில் உள்ள ஈழம் இன்றளவும் அடிமையாக இருப்பதை இம்மாநாடு மிகக் கவலையுடன் பார்ப்பதோடு, முள்வேலிக்குள் அடைபட்டுள்ள தமிழீழ மக்களின் ஒட்டுமொத்த வேதனைக்கும் ஒரே தீர்வாக சுதந்திரத் தமிழீழமே என்பதால், தமிழீழம் அமைய இந்திய அரசாங்கம் துணை நிற்க வேண்டுமெனவும், தமிழீழ அரசை உலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டுமெனவும், இப்போதைக்கு உடனடியாக தமிழீழ மக்களின் விருப்பத்தை அறிந்து நிறைவேற்ற ஐ.நா அவை பொது வாக்கெடுப்பு ஒன்றினை இயன்றளவு விரைந்து நடத்த வேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

எண் 14

நிலவுகிற சமூக அமைப்பில் எல்லாவற்றையுமே மாற்ற வேண்டிய அவசியம் இருக்கிற சூழலில், ஒரு மாபெரும் மக்கள் புரட்சியை முன்னெடுக்க வேண்டிய பெரும் எண்ணிக்கையிலான மாபெரும் இளைய சமுதாயம் மது, புகையிலை, பீடி, சிகரெட், போதை மாத்திரை, ஊசி, ஹான்ஸ் போன்ற எண்ணிலடங்காத போதைப்பொருட்களில் அடிமைப்பட்டிருப்பது சமூக மாற்றத்தை நேசிக்கும் அனைவரது உள்ளங்களிலும் சொல்லணா வேதனையை ஏற்படுத்தி இருக்கிறது. குறிப்பாக, கல்வி நிறுவனங்களை தனியார் நடத்திக்கொண்டிருக்கையில் மதுபானக் கடைகளை அரசாங்கம் நடத்தி வருவது உலக அரங்கில் நமக்கான தலைகுனிவு என்பதில் அய்யமில்லை. எனவே, தமிழக அரசு இயன்றளவு விரைவில் முழு மதுவிலக்கை தமிழகத்தில் அமுல்படுத்த வேண்டுமென இம்மண்ணுரிமை மாநாடு தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.

எண் 15

நாட்டை, மண்ணை, மக்களை வளப்படுத்துவதில், ஒடுக்கப்பட்ட மக்களின் உழைப்பு நகரம் கிராமம் என்று எந்த விதத்திலும் வேறுபடாததாகும். கிராமங்களில் வேளாண்மை செய்து நாட்டை உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையச்செய்யும் அதே ஒடுக்கப்பட்ட சமூகம்தான் நகரங்களில் அடிப்படைக் கட்டுமான வேலைகளைச் செய்து நகரங்களை உருவாக்குகிறது. ஆனால், நகரத்தை[redacted] கருவாக்கி உருவாக்கிய ஒடுக்கப்பட்ட மக்களையே நகரத்துக்கு அசிங்கம் என்று கருதி நகரங்களை விட்டு வெளியேற்றுகிற மாபாதகச் செயல் சத்தமில்லாமல் அரங்கேறி வருகிறது. குறிப்பாக சென்னை போன்ற மாநகரங்களில் எளிய மக்களின் சேரிகள் திடீரென தீப்பற்றி எரிவதும் பாதுகாப்பு நிவாரணம் என்ற பெயரில் பள்ளிக்கூடங்களிலும் கல்யாண மண்டபங்களிலும் தங்க வைக்கப்படுவதும், பிறகு திரும்ப வந்து பார்க்கிற வேளையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடம் என்று நகரம் நம்மைத் துரத்துகிறது, நகரத்தை சிங்காரமாக்குகிறோம், சுந்தரமாக்குகிறோம் என்கிற பல்வேறு பெயர்கள் தலித்துகளை நகரவெளியேற்றம் செய்யும் வன்கொடுமை நிகர்த்த குற்றத்தை தமிழக அரசு உடனே கைவிட வேண்டுமெனவும் மாநகர தலித்துகளின் மண்ணுரிமையை

உத்தரவாதப்படுத்திட வேண்டுமெனவும் இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.